2021 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினரை ஊக்குவிக்க நிச்சயம் இந்த அரசு தயங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்து பரிசீலித்து, ஆராய்ந்து, என்னென்ன வகையிலே அவர்களுக்குச் சிறப்பு செய்ய வேண்டுமோ, அதைப் பரிசீலித்து, அவர்களுக்குரிய ரிவார்டு நிச்சயம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

கனிம வளங்கள்

***3239—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படும் மணல், ஜல்லி, செங்கல் போன்றவற்றிற்குத் தடை விதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் ஒப்புதலுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அண்டை மாநிலங்களுக்குக் கனிமங்களை எடுத்துச் செல்வதைத் தடுக்க சட்டத்தில் இடமில்லை. அதேநேரத்தில் சட்டவிரோதமாகவோ அல்லது அதிகப்படியான அளவிலோ கனிமங்களை அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதைத் தடுக்க அரசு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை வளம் நிறைந்த, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகை நில அமைப்புகளைக் கொண்டது கன்னியாகுமரி மாவட்டம். 48.9 சதவிகித விவசாய நிலங்கள், 32.57 சதவிகித அடர்ந்த வனப் பகுதிகள், குறிப்பாக 9 அணைக் கட்டுகளைக் கொண்ட மாவட்டம். அத்துணை இயற்கை வளங்களுக்கும் காரணமாக இருப்பது மேற்குத் தொடர்ச்சி மலை. இன்னும் சிறப்பான வளங்கள் நிறைந்த அந்த மாவட்டத்திலே, கல் பாறைகள் மற்றும் சிறுமலைகள் உடைக்கப்பட்டு கற்களாகவும்,* M-sand*-மணலாகவும் கனிமப் பொருட்கள் கேரளாவுக்கு பல ஆண்டுகளாகக் கடத்தப்பட்டு வருகின்றன. இது பல ஆண்டுகளாக நடைபெறுகின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகக் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இதனால், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்குக் கனிம வளங்கள் கிடைப்பது அரிதாகி, பாதிப்பு ஏற்படுகிறது. 500-க்கும் அதிகமான* Taurus Lorry*-களில் சுமார் 50 முதல் 70 டன் எடை வரையிலான கனிம வளங்களைக் கடத்துகின்றார்கள். இதற்கு மக்கள் பலவேறு வகைகளில் கோரிக்கை வைத்தும், அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் எந்தவிதமான தடையையும் விதிக்கவில்லை என்ற வருத்தத்தை நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். கேரளாவில் கனிம வளங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், அவர்கள் அங்கிருந்து ஒரு சிறிய அளவுகூட எடுப்பதில்லை. அத்துணையும் நம்முடைய தமிழ்நாட்டிலிருந்துதான் கொண்டு செல்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறப்பு என்னவென்றால், 17* HACA *கிராமங்கள் இருக்கின்றன. இதன் காரணமாக மலைப் பகுதிகள் நிறைந்திருக்கக்கூடிய இடங்களில் மலைகளைக் காணவில்லை. இயற்கை அழிந்துவிட்டால் மழை பெய்யாது. முன்பு பெய்த அளவிற்கு இப்பொழுது மழை இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இயற்கை வளங்களைக் காப்பதற்கு அரசு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து, உடனடியாகத் தடை செய்வதற்கு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

2021 ஆகஸ்ட் 31]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்திற்கும் கனிமங்களை எடுத்துச் செல்வதற்குத் தடையில்லை என்று உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பிலே தெரிவித்திருக்கிறது. அதனடிப்படையிலே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதனை நாம் தடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைகள் இருக்கின்றன; வனங்கள் இருக்கின்றன; மலைகள் இருக்கின்றன என்கின்ற காரணத்தினால், எடுத்துக்கொண்டு போகக் கூடாது என்று சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எங்களுக்குத் தெரியும்; கன்னியாகுமரி மாவட்டம்* Eco–sensitive area *என்ற கருத்தில் நான் மாறுபடவில்லை. இரண்டாவது, கன்னியாகுமரி–திருவனந்தபுரம் சாலை,* double *சாலையில்லை; அது* single road–*தான். ஆகையினால், பெரிய, பெரிய வாகனங்களில்,* truck–*களில், டன், டன்னாக, எடுத்துக் கொண்டுபோகும்போது சாலைகள் பழுதடைகின்றன என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்தல்ல.*

ஆகையினால்தான், sensitive area *என்ற காரணத்தாலே, அங்கேயிருக்கிற 15* quarry–*களில் 12* quarry–*களை அரசு மூடிவிட்டது. தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில்* quarry *கிடையாது. ஆக, தூத்துக்குடி, திருநெல்வேலியிலிருந்துதான் கேரளாவிற்கும் போகிறது. இதைத் தடுப்பதற்கு சட்டமில்லாத காரணத்தால், எடுத்துக்கொண்டு போகிறவர்கள் பெரிய, பெரிய* truck–*கள் என்றில்லாமல், குறிப்பிட்ட டன்னுக்கு மேலே எடுத்துக்கொண்டு போக முடியாது என்ற ஒரு வரைமுறையை வகுத்தால் நன்றாக இருக்கும். அதைத்தான் செய்ய முடியுமே தவிர, வேறு வழி கிடையாது. மாவட்டத்திலிருந்து எதிர்ப்புக்குரல் வெளிவரும். ஆகையினால், இந்த அரசு அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின்மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. இந்த அரசு எப்படியாவது இதன்மீது நடவடிக்கை*

எடுக்கும்; இயற்கையைப் பாதுகாக்கும்; எங்களுடைய மாவட்டத்தைப் பாதுகாக்கும்; இயற்கை அழகைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஒரு மலையை எளிதாக உடைத்துவிடலாம். ஆனால், எத்தனை கோடி ரூபாய்களைச் செலவு செய்தாலும் ஒரு மலையை உருவாக்க முடியாது; ஓர் ஆற்றை உருவாக்க முடியாது. நமக்குக் கிடைத்த இந்த இயற்கை அதிசயங்களை, நம்முடைய சந்ததியினர் அனுபவிக்க வேண்டும்; அவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தில், மலைகள் உடைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்; குமரி மாவட்ட மக்களுடைய கோரிக்கையை ஏற்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்தும் கனரக வாகனங்கள் வருகின்றன. சாலை வசதியே இல்லை; 4 வழிச் சாலை அங்கே இல்லை. சிறிய சாலை வழியாகத்தான் போகவேண்டும். நான் ஏற்கெனவே பேசும்போதுகூடச் சொன்னேன். இந்த அரசை அன்பாக வேண்டுவது என்னவென்றால், எங்களுடைய மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு pollution certificate கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லமாட்டேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்கள் பெரிய பாறைகளை உடைக்கக்கூடாது; நிலப்பரப்பில் இருக்கக்கூடியவற்றை, கன்னியாகுமரி மாவட்ட மக்கள் தங்களுடைய தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், கேரளாவிற்குக் கொண்டு செல்வதைத்தான் நாங்கள் தடை செய்ய வேண்டுமென்று கேட்கிறோம். உச்ச நீதிமன்றம் சொன்னாலும், இந்த அரசு, உடனடியாக உச்ச நீதிமன்றத்திலே மனு தாக்கல் செய்து, இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டு, இதைத் தடை செய்ய முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்ற மாவட்டங்களில் கல் quarry–களிலிருந்து கல் எடுக்கும்போது பெரும்பாலும் பூமியிலிருந்துதான் அதிகமாக வெட்டி எடுப்பார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும்தான் பூமியிலே கல் கிடையாது. அங்கு உயர்ந்து நிற்கின்ற மலைகளிலிருந்துதான் கல்லைச் செதுக்கி எடுக்கிறார்கள். எனவே, அப்படி இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், அந்த மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருந்த*

2021 ஆகஸ்ட் 31]

15 quarry–*களில் 12* quarry–*களை அரசு மூடிவிட்டது. இப்பொழுது இருக்கிற பிரச்சினை என்னவென்றால், கேரளத்திற்கு தூத்துக்குடி, திருநெல்வேலியிலிருந்து கனிமங்களை அவர்களே ஏற்றிக்கொண்டு போகிறபோது,* Eco–sensitive area *பாதிக்கப்படுகிறது என்ற கவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிறது. எனவே, அதில் நாங்களும் கவலைகொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தியடையும் வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்து, கட்டுப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

பாதாள சாக்கடைத் திட்டம்

***127—திரு. S.R. இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம் ஆகிய பேரூராட்சிகளை செம்பாக்கம் நகராட்சியுடன் ஒருங்கிணைத்து பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த, TNUIFSL *நிறுவனத்தின்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்காணும் பேரூராட்சிகளுடன் செம்பாக்கம் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளையும், தாம்பரம் நகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாகத் தரமுயர்த்த 24–8–2021 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற மானியக்*